Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.270/2024

Dated 24-11-2025
Deposition of witness for : PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அர்சுணன் | வயது | : | 31 |
| தந்தை பெயர் | : | சேகர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | டைல்ஸ் ஒர்க்ஸ் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1,2 absent 355 BNSS Petition filed and allowed.**

Ld. Defense **Counsels Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். டைல்ஸ் ஒட்டும் தொழில் செய்து வருகிறேன்.

2) 24.2.2022ம் தேதி இரவு 10 மணியளவில் நானும் லெனின் என்பவரும் அவர் வீட்டிற்கு அருகில் உள்ள காலி மணையில் இருவரும் மது அருந்திக்கொண்டிருந்தோம்.

3) அப்போது மேற்படி லெனின் வீட்டிற்கு பின்புறத்தில் உள்ள ரமேஷ் என்பவர் டார்ச் லைட் எடுத்து வந்து எங்கள் முகத்தில் அடித்து ஏன்டா இங்கு உட்கார்ந்து இருக்கிறீர்கள் என்று கேட்டார். அந்த

நபர்கள் நீதிமன்றத்தில் தற்போது இல்லை. ( இரண்டு எதிரிகள் தரப்பிலும் **355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

4) மேற்கண்ட நபர் தொடர்ந்து என் மூஞ்சியில் டார்ச் அடித்துக்கொண்டிருந்தார். அப்போது நான் அவர் செல்லை தட்டிவிட்டபோது அவர் கீழே விழுந்துவிட்டார். அப்போது அவர் கூட வந்த சாமிகண்ணும் உடன் இருந்தார்.

5) இருவரும் 15 நிமிடம் கழித்து மீண்டும் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்து ரமேஷ் என்பவர் வைத்திருந்த வாளை எடுத்து கூட வந்த சாமிகண்ணுவிடம் கொடுத்தார். அப்போது ரமேஷ் என்பவர் என்னை அருவாளால் வெட்டும்போது எனது இடது கையில் கட்டை விரல் , சுண்டுவிரல் தவிர மற்ற மூன்று விரல்களிலும் வெட்டு விழுந்தது. அப்போது கீழே உதைத்து தள்ளிவிட்டார். பிறகு ரமேஷ் இடது பக்க முகத்தில் காதுக்கு அருகே வெட்டினார். அப்போது நான் எதிரிகளிடம் கெஞ்சினேன். எனக்கு குழந்தை உள்ளது . விட்டு விடுங்கள் என்று சொன்னேன். மீண்டும் என்னை தள்ளிவிட்டு காதில் வெட்டியதால் காது கிழிந்து விட்டது. அப்போது தூரத்தில் இருந்த சாமிகண்ணு என்பவர் கல், பாட்டில் ஆகியவற்றால் என்னை தாக்கினார். எனக்கு மூக்கு மற்றும் மேல் உதடு, மண்டை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது.

6) நான் மயக்கம் ஆகிவிட்டேன். அதன்பிறகு என்னை தஞ்சாவூர்அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சேர்த்து அங்கு சிகிச்சை பெற்றுக்கொண்டு மறுநாள் தனியார் மருத்துவமனை மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

7) இது சம்பந்தமாக யார் புகார் கொடுத்தது என்று எனக்கு தெரியவில்லை. மயக்கம் தெளிந்த பிறகு போலிசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள்.

8) காட்டப்படுகின்ற இரண்டு ஆயுதங்களால் அவர்கள் என்னை தாக்க வில்லை. அந்த ஆயுதம்

வேறு மாதிரி இருந்தது.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கினங்க எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது..

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்